**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2023-ம் ஆண்டு ஜீலை மாதம் 10ம் நாள் திங்கள்கிழமை பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | செல்வராஜ் | தொழில் : | |
| த.பெ: | திருவேங்கடம் | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**10.7.2023 OS No. 69 /2019 பிவா.சா.1** செல்வராஜ்ஆஜர்

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. தாவா வழக்கு என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னுடைய பாகவஸ்தி ஆவணத்தை ரத்து செய்யக்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்து எனது குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்று காட்டக்கூடிய ஆவணம் ஏதேனும் வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். என் அப்பா பெயரில் பட்டா, என்னுடைய பெயரில் பட்டா மற்றும் ரசீதுகள் என்னிடம் உள்ளது. நான் வாசு, சௌந்திரபாண்டியன், ஹரிராமமூர்த்தி ஆகியோர்கள் அண்ணன் தம்பி என்றால் சரிதான்.

2. நான் வாசு, சௌந்திரபாண்டியன், ஹரிராமமூர்த்தி ஆகிய 4 பேர் சேர்த்துதான் பாகவஸ்தி ஆவணம் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் என் தாயார்தான் எங்களுக்கு பாகம் பிரித்துக்கொடுத்தார். என் தாயார் எனக்கு பாகம் பிரித்துக்கொடுத்தார் என்பதை எனது நிருபணவாக்குமூலத்திலோ, எதிர்வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளோம். தாவா சொத்தை பொறுத்தவரையில் பாகவஸ்தி ஏற்படுத்திகொடுப்பதற்கு என் தாயாருக்கு உரிமை இல்லை என்றால் உரிமை உள்ளது. ஆதியில் மொட்டையசாமி கோவில் நிர்வாகத்தை என் தந்தை திருவேங்கடம் செட்டியார் நடத்தி வந்தார் என்றால் மொட்டையசாமி கோவில் பெயரில் தாவா சொத்து இல்லை.

**3.** மொட்டையசாமி கோவில் நிர்வாகத்தை என் தந்தை செய்தாரா என்றால் மொட்டையசாமியை குலதெய்வமாக வழிபட்டு வருகிறோம். மொட்டையசாமி கோவில் நாங்கள் மட்டும்தான் குலதெய்வமாக வழிபட்டு வருகிறோமா அல்லது மற்ற சமுதாயத்தினரரும் குலதெய்வமாக வழிபட்டு வருகிறார்களா என்றால் எங்கள் குடும்பத்தார் மட்டும்தான் வழிபட்டு வருகிறோம். மற்ற யாரும் திருக்கோவில் வரமாட்டார்கள் என்றால் அரிதாக வருவார்கள். மொட்டையசாமி கோவிலுக்கு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டு விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

4. மடத்துக்கோ, சமாதிக்கோ கும்பாபிஷேகம் நடத்தமாட்டார்கள் என்றால் மடமாக இருந்துதான் பின்னர் கோவிலாக மாறியது. மடம் மருவி கோவிலாக மாறியது என்பதற்கான ஆவணம் வைத்துள்ளேனா என்றால் எஸ்எல்ஆர், அ பதிவேடு வைத்துள்ளேன். மேற்படி த்திற்கு எங்கள் குடும்பத்தினர் மட்டும்தான் செலவுசெய்தோமா என்றால் என் அண்ணன், தம்பி அனைவரும் சேர்ந்து செலவுசெய்தோம். என் அண்ணன், தம்பி செலவு செய்த கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் என் அண்ணன் வைத்துள்ளார்.

5. கும்பாபிஷேகம் பொதுமக்களிடம் வசூல் செய்துதான் நடத்தப்பட்டது என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. கும்பாபிஷேகம் பொதுமக்களிடம் வசூல் செய்துதான் நடத்தப்பட்டது என்றாலும், அதனால்தான் என்னால் கும்பாபிஷேகம் தொடர்பான எந்த ஆவணமும் தாக்கல் செய்ய இயலவில்லை என்றால் சரியல்ல. அருள்மிகு மொட்டையசாமி திருக்கோவில் தனியார் கோவில் என பரிகாரம் கோரி என் தந்தை இந்து சமய அறநிலையத்துறையிடம் O.A No.109/1959 வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் என் அப்பா மனுதான் தாக்கல் செய்திருந்தார். வழக்கு தாக்கல் செய்யவில்லை.

6. O.A No.109/1959 வழக்கு பொதுகோவில் என்று கூறி தள்ளுபடி செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியும் என்றால் தவறு. O.A No.109/1959 வழக்கில்தான் பரம்பரை நிர்வாகம் என்று உத்தரவு வழங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. பரம்பரை அறங்காவலர் என்று உத்தரவு கொடுத்த விபரம் எனக்கு தெரியும் என்றும், வழக்கிற்காக வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி உத்தரவின் அடிப்படையில்தான் நான், வாசு, சௌந்திரபாண்டியன், ஹரிராமமூர்த்தி ஆகியோர்கள் பரம்பரை அறங்காவலர் என்ற முறையில் பணியாற்றிவந்தோம் என்றால் பரம்பரை அறங்காவலர் எதுவும் தெரியாது.

7. அருள்மிகு மொட்டையசாமி கோவிலுக்கு சர்வே எண்.97/7 கட்டுப்பட்ட 69 செண்ட் நிலம் இருந்ததா என்றால் அது என் அப்பா பெயரில் இருந்தது. கோவில் பெயரில் இருந்த நிலத்தை விற்றதால்தான் மேற்படி 4 பேரையும் பரம்பரை அறங்காவலர் பொறுப்பில் இருந்து இந்து சமய அறநிலையத்துறை நீக்கியது என்றால் எனது அண்ணன் வாசுதான் பரம்பரை அறங்காவலராக இருந்தார். அவர் தற்போது இறந்துவிட்டார். எனது அண்ணன் வாசு மட்டும் அறங்காவலராக இருந்தார் என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என்னிடம் இல்லை. எனது சகோதரர் ஹரிராமமூர்த்தியிடம்தான் உள்ளது.

8. நான், வாசு, சௌந்திரபாண்டியன், ஹரிராமமூர்த்தி ஆகியோர்களை பரம்பரை அறங்காவலர் பொறுப்பில் இருந்து நீக்கியது தொடர்பாக சென்னை ஆணையரிடம்

மேல்முறையீடு செய்தோம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி மேல்முறையீடு வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் அந்த விபரமே எனக்கு தெரியாது. என் மனைவி அனுசியா அறங்காவலராக இருந்தாரா என்றால் ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் 28.6.2017ம் தேதியிட்ட எதிர்வழக்குரை நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரை என்றால் சரிதான்.

9. மேற்படி எதிர்வழக்குரையின் முதல் பக்கத்தில் 3 வது பாராவில் "1ம் பிரதிவாதி மனைவி அனுசியா என்பவரது செயல்பாடு பற்றியும் அது சம்மந்தமாக இந்து அறநிலையத்துறையில் வாதி தரப்பில் மனுத்தாக்கல் அதுவும் நிலுவையில் இருந்து வருகிறது. இந்த பிரதிவாதியின் மனைவி அனுசியா நாளது தேதி வரை டிரஸ்டி பொறுப்பில் இருந்து வருகிறார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு நினைவில்லை. என் மனைவி அனுசியா, முத்துலெட்சுமி, ராசாத்தி, உய்யராயி கடந்த 2000ம் ஆண்டு பரம்பரை அறங்காவலராக தேர்ந்து எடுக்கப்பட்டார்களா என்றால் எனது அண்ணனுக்குதான் தெரியும்.

10. மேற்படி பரம்பரை அறங்காவலரில் என் மனைவியும் இருந்தார் என்பதை தெரிந்துகொண்டே வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி 4 பேரில் உய்யராணி நிர்வாக அறங்காவலர் குழு தலைவரலாக தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றால் அது சம்மந்தமாக எனக்கு தெரியாது. என் அண்ணனுக்குதான் தெரியும். எனது மனைவி பரம்பரை அறங்காவலராக தேர்ந்தெடுக்கப்பட்டாரா என்றால் எனக்கு தெரியாது. எனது அண்ணன் அவரது கொழுந்தியாளான என் மனைவியிடம் ஏதேனும் ஏமாற்றி கையெழுத்து பெற்றுவிட்டாரா என்று தெரியவில்லை.

11. வாதி கோவில் இந்து அறநிலையத்துறைக்கு கட்டுப்பட்ட கோவில் என்றால் இந்து அறநிலையத்துறைக்கு கட்டுப்படாத கோவில் ஆகும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 ஆவணமான மொட்டையசாமி திருக்கோவிலின் சொத்து பதிவேடு என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ஆவணமான மொட்டையசாமி திருக்கோவிலின் சொத்து பதிவேட்டில் தாவா சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. வா.சா.ஆ.9 ஆவணமான மொட்டையசாமி திருக்கோவிலின் சொத்து பேரேட்டில் 2 வது அயிட்டமாக தாவா சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

12. மொட்டையசாமி திருக்கோவிலில் பூசாரியாக நான் இருந்தேன் என்றால் சரிதான். நான் பூசாரியாக இருந்தபோது நன்கொடை வசூல் செய்து மோசடி செய்துவிட்டேன் என்று வாதி என் மீது அசல் வழக்கு எண்.181/2013 வழக்கை மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார் என்றால் தவறு. மேற்படி அசல் வழக்கு எண்.181/2013வழக்கில் எனக்கு எதிராக தீர்ப்பு

பிறப்பிக்கப்பட்டது என்றாலும், மேற்படி தீர்ப்பு, தீர்ப்பாணை வா.சா.ஆ.26, 27ஆக வாதி தரப்பில் குறியீடு செய்யப்படடுள்ளது என்றாலும் நான் அந்த தவறு செய்யவில்லை.

13. எனக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டதா என்றால் எனக்கு எதிராக தீர்ப்பு இல்லை, கோவிலில் இடையூறு செய்வதாகதான் தீர்ப்பு வந்தது. மேற்படி தீர்ப்பை எதிர்த்து மானாமதுரை சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு எண். 18/2019 தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மேல்முறையீட்டு வழக்கும் எனக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்கு மூலத்தில் தாவா சொத்து தவம் செய்வதற்கான இடம் என்று குறிபிடப்பட்டதற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் தாய், தகப்பனார் மடம் என்றுதான் சொல்லியுள்ளார்கள். மடம் என்றுதான் எஸ்எல்ஆர்-ல் உள்ளது.

14. என் தகப்பனார் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.65/1939 வழக்கு பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் தகப்பனார் தாக்கல் செய்த AS No. 7/1941 வழக்கு பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2ம் பிரதிவாதி தாவா சொத்தின் ஒரு பகுதியில் சட்டவிரோதமாக குடியிருந்தார் என்றால் தாவா சொத்தில் என்னுடைய அனுமதியின் பேரில் வாடகைக்கு குடியிருந்தார். 2ம் பிரதிவாதிக்கு எதிராக இந்து சமயநிலையத்துறையில் சட்டப்பிரிவு 78-ன் கீழ் வாதி தரப்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அவ்வழக்கில் 2ம்பிரதிவாதிக்கு எதிராக தீர்ப்பு வந்தது என்றால் அந்த வழக்கு பற்றி எனக்கு தெரியாது.

15. வாதி தரப்பில் தாவா சொத்து சம்மந்தமாக என் மீது இந்து சமயநிலையத்துறையில் சட்டப்பிரிவு 78-ன் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் நிலுவையில் உள்ளது. 93/1-ல் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 70 செண்ட் ஆகும். நானும், இந்த வழக்கின் 3 முதல் 6 பிரதிவாதிகளும் கோவில் இடத்தை எங்களது பெயருக்கு பட்டா மாற்றம் செய்தோம் என்றால் என் அப்பா இடத்தை பாகவிஸ்தி அடிப்படையில் எங்களுடைய பெயருக்கு மாற்றினோம். சௌந்திரபாண்டியனும், ஹரிராமமூர்த்தியும் பெயர் மாற்றம் செய்யவில்லை என்றால் அது அவர்களது விருப்பம்.

16. சௌந்திரபாண்டியனும், ஹரிராமமூர்த்தியும் பெயர் மாற்றம் செய்தார்களா, இல்லையா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி சௌந்திரபாண்டியனும், ஹரிராமமூர்த்தியும் எந்த பட்டா மாறுதலும் செய்யாததால் அவர்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அது அவர்களது விருப்பம்.

(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)

Taken down by me in open court
read over/ interpreted to the witness
in Tamil and acknowledged by him,
her to be correct.

District Munsif Cum
Judicial Magistrate,
Thiruppuvanam.